உ

சிவமயம்



இது

வடமராட்சி துன்னாலை வடக்கு வாசரும்,

உயர்சைவ நன்னெறியினருமாகிய

திரு. வயிரவனார் சங்கரப்பிள்ளை

திருமதி சங்கரப்பிள்ளை மீனாட்சி

அவர்களது தவமகன்

# திரு. க. கனகரத்தினம்

அவர்களது பிரிவுகுறித்த

# நினைவு மலர்.

**18-01-1995**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தனம் தேடப்பறந்து சென்று

அரன்தன திணையடி யடைந்த



# திரு. சங்கரப்பிள்ளை கனகரத்தினம்

அன்னை மடி:
03-05-1959

ஆண்டவன் அடி:
24-07-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவங் கெடுத்தேழை யேனையுய்யத்
தெருளாய சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதிமா தலத்துளானை
ஆறங்க நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானை புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே யாற்றநான் போக்கினேனே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாம்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக் குண்டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

நீறணி பவளக்குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செய் யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழறஉளறி
உமை மணவாளனுக் காள்
பாரும் விசும்பும் அறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பொங்கரா அணிகளாகப் புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்திற் பூதி அணிந்திடு மாதிபோற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல் வியன்புயம் போர்த்தாய்
போற்றி
சங்கரா பரமாபோற்றி தாணுவே போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலாமா மணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடும் கடவுள் துதி

## துன்னாலை வெல்லிக்கந் தோட்டப் பிள்ளையார்

சோதியே சோதிப் பிழம்பெனும் படியே
தோன்றியே விளங்கிடும் மூர்த்தி
ஆதியோ இல்லை அனாதியே யான
ஐங்கர வெல்லிக்கந் தோட்டம்
ஏதிலேன் என்றே இரப்பவர்க் கருள
இன்னருட் கோயிலா யேற்றாய்
சோதியே நின்தாள் ஏத்திட என்றும்
தவறிலன் தாளளித் தாளே.

முக்கணன் மகனே மூத்தவி நாயகா
மூசிக வாகன முதல்வா
முக்கணங் குடையாய் மனநிறை வாக
முப்பொழு தும்பணிந் தனனே
இக்கணம் இந்த உடலதன் உறவை
இழந்திட எண்ணின னையா
எக்கணம் ஆன எண்ணமோ இன்றே
ஏற்றருள் புரிகுதி ஐயா.

தலையினிற் குட்டித் தோப்புக் கரணமும்
தந்துனைப் பணிவது தவறேன்
நிலையிலதான பொருள்பல தேடி
நெஞ்சமிங் கலைந்தது முண்மை
வலைபடு மீனாய் வழிபடு முலகில்
வாழநான் விரும்பவே இல்லை
நிலைபெறு பேறாம் நின்னடி தாராய்
நிர்மலா நின்னடி போற்றி.

## செல்வச் சந்நிதி முருகன்

காவடி கொண்டடி யாருன நின்னடி காணவெனத்
தாவடி யாரென வந்துவ ணங்கிடத் தந்தருள்வாய்
பூவடி தந்துப ணிந்தன னுன்னடி போற்றினனே
சேவடி தந்திடு சந்நிதி வேலவா தாங்குதியே.

ஆறுப டர்ந்திடு சந்நிதி ஆலய மங்கமர்ந்த
ஆறுமு கத்தனே அங்கையில் வேலுடை யற்புதனே
ஆறுத லைப்பெற உன்னடி வேண்டின னாகையினால்
பேறுகொ டுக்குதி வேறுநி னைப்பறி யேன்பரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைப் பழித்த இரத்தின ளாந்தெய்வ யானையுடன்
தாயைப் பழித்த விழிகொண்ட வள்ளி தமையுவந்தாய்
மாயப் பிறவியை வேண்டுகி லேனுனை வேண்டுகின்றேன்
வாயைத் திறக்க வருமுன்தன் நாமம் வழங்கருளே.

## துன்னாலை, மனைத் தெய்வம் அம்மன்

எங்கள்குலத் தெய்வமே எம்மயவின் கோயிலிலே
தங்கியருள் செய்திடுமெம் தாயாரே—இங்கெனையே
வாட்டுதுயர் போக்கிவிடு வல்லவளே அம்மனே
சூட்டுவது உன்னடியே தான்.

பொங்கலிட்டுப் பூவிட்டுப் போற்றிப் படையலிட்டு
அங்குன் அருளிரக்கா நாளுண்டோ—பங்கமிகு
இப்புவியை யேவெறுத்தேன் எங்களம்மன் செய்ததுண்டேல்
தப்பறுத்தே ஆண்டருளு வாய்.

நீறிடுவேன் நாளும் நினையே வலம்வருவேன்
கூறிடுதல் உன்நாமம் என்றிருந்தேன்—பேறுபெற
மண்ணகத்தில் ஆசை மிகவாகி நிற்கின்றேன்
விண்ணிலழைத் தேயருளைத் தா.

## வல்லிபுர ஆழ்வார்

பாலின் கடவிற் பாம்பணையிற் படுத்தே அடியார்
துயர்போக்கும்
ஜாலம் எதுவோ செங்கமலக் கண்ணா தாமோ தரத்தானே
காலம் முடிந்தா லுன்பாதம் காட்டல் தானே முறையாகும்
ஞாலம் புரப்பா யெந்தனுக்கு நல்கா யருளை இப்போது

வெண்ணெய் உண்டு வளர்ந்தாயே வேறோர்போது
விருப்புடனே
மண்ணை உண்டாய் என்றகதை மகிழ்வா யுரைக்கக்
கேட்டேனே
விண்ணை நிறைத்த கோலத்தாய் வாசத் துளசி
யணிவோனே
மண்ணை வெறுத்தே னுன்பாதம் வேண்டு கின்றேன்
வழங்குதியே.

தருமம் தவறி உலகமிது தவறைப் புரியும் காலத்தே
உருவம் எடுத்து நீவந்தே உற்ற துயரம் போக்கிடுவாய்
கருவம் கொண்ட உலகமிது கொலையா லுள்ளம் களிக்கிறது
வருமுன் வரவை எதிர்பார்த்தார் வருவாய் அருளைத்
தருவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடதுன்னை வாசர் வயிரவனார் — சங்கரப்பிள்ளை
தம்பதிகளின் தவமகன் திரு. கனகரத்தினம்
அவர்களது பிரிவு குறித்த

# இரங்கற் பாக்கள்

## திதி வெண்பா

தக்கபவ ஆண்டதனைச் சாராடி யில்லபர
பக்கத் துதியைதிதி பன்னலமும்—மிக்கவனாம்
தேசுடைய மன்கனக ரத்தினமவ் விண்ணமரும்
ஈசனடிப் பேறடைந்த நாள்.

### தாயார் மீனாட்சி

மக்களெனப் பெற்றெடுத்த ஆறு நல்ல
மணிகளிலே நீயொருத்தன் தந்தை மாண்ட
துக்கமிகப் பெற்றதுடன் குடும்பம் காக்கும்
துடிப்புடனே நோர்வேக்குச் சென்று ழைத்தாய்
தக்கவய டைந்தசகோ தரிமார் வாழ்வு
தனைக்கவென உதவினையே நகைகள் வீடு
மிக்க அன்பாய்ப் பெற்றவர்கள் துடிக்கி றார்கள்
மறையமனம் வந்ததுவோ மகனே ஐயோ.

தட்டிநடந் தறியாய்என் சொல்லை. தந்தை
தன்னையிழந் திட்டஎங்கள் வாழ்விற் செல்வம்
கொட்டியநீ ஊர்திரும்பி வந்தே என்தன்
கண்குளிரத் திருமணத்தைச் செய்வா யென்று
கட்டியதோர் மனக்கோட்டை இடிந்து போக
கண்மூடி விட்டாயாம் என்ற சேதி
கிட்டிவிட நிலம்புரண்டு அழுகி றேனே
கண்ணீரே சிந்திநிதம் கதறு வேனே.

### அண்ணன் கந்தசாமி

தாங்கியெம்மைக் காக்கவுள்ள தெய்வ மான
தந்தைதனை இழந்துதுடித் திருந்த வேளை
நாங்களினி என்செய்வோம் எனவே தேம்பி
நினைந்ததனை மனத்தினிலே எண்ணித் தானோ
நீங்களினி ஏங்குவதேன் என்று சொல்லி
நோர்வேக்குப் போயுழைத்தாய் சேதி கேட்டுத்
தாங்கரிய துயராலே தவிக்கிறேனுன்
சவவடிவம் காணாத பாவி யானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுவா என்றதும் என்சொல்லுத் தட்டாத தம்பிபணம்
ஒன்றுதான் எங்களைக் கைதூக்கும் என்றே நினைத்தகன்றாய்
இன்றுநீ இப்படி யேனோடிப் போயினை உற்றதுயர்
என்றுமே நீங்காத ஒன்றாகத் தேம்பியே ஏங்கினமே.

*சகோதரிமார்: கமலேஸ்வரி, கமலகுமாரி, கணேஸ்வரி*

எங்களது வாழ்வுபூஞ் சோலை யாக்கி
ஏற்றமுற வைத்தவனே எமக்கா கத்தான்
அங்குனது உடல் தேயப் பாடு பட்டாய்
அலங்கரித்த மணமேடை யமர வைத்தே
இங்குனது திருமணத்தைக் காண நின்றோம்
இடிதலையில் வீழ்த்தினையே கடைசி நேரம்
தங்கமுகம் கூடநாம் பார்க்கச் சோகம்
தந்தாயே உடன்பிறப்பே துடிக்கி றோமே.

தந்தனை யன்பினை மட்டுமா. தேடி யுழைத்தவைகள்
தந்தனை யுன்சுக சேதிசொல் தானெழு தும் அஞ்சல்
தந்தனை, சாவு வரைக்கும் இனிமற வாததுயர்
தந்தனை. வெந்தது வேமனம் வெம்பித் துடித்தனமே.

*தம்பி கருணேஸ்வரன் (ஜேர்மனி)*

பாசமதைச் சொரிந்தென்னைக் காத்த அண்ணா
பறந்துவா என்றெனக்குப் பணம்அ னுப்பி
ஆசைப்பட் டவையெல்லாம் தந்த அண்ணா
அமையுமுங்கள் மணவிழா பற்றி ஊரிற்
பேசிக்கொண் டவையெல்லாம் அறிந்த வேளை
பேரிடியாய் வந்தசெய்தி கேட்டேன் ஐயோ
நேசத்தைத் துறந்தோட ஏனோ உங்கள்
நெஞ்சமது எண்ணியது அண்ணா ஐயோ.

*மைத்துனர்கள்: பஞ்சலிங்கம், மகாலிங்கம், சாந்திநிகேதன்*

தானுருகிக் கொண்டழியும் மெழுகு வர்த்தி
சார்ந்தவர்கள் வாழ்விதனில் ஒளிபெ ருக்கும்
தேனமிர்தம் போல்வார்த்தை பேசும் எங்கள்
தவவடிவ மைத்துனனே நீயும் எம்மை
ஊனுடலை வருத்தியுழைத் தங்க ழைக்க
உதவுவதாய்க் கூறினிரே உயிரை நீக்கிப்
போனதுமேன் பாய்கிறகண் ணீரை மண்ணிற்
படரவிட்டுத் தவிக்கின்றோம் சாந்தி சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனி தவமணி

தட்டியது கிடையாது அண்ணன் சொல்லை
தனிமரமாய் ஆக்கிவிட்டு நடந்தா யென்று
கொட்டுகிறார் கண்ணீரை குழறு கின்றார்
கேட்டதெல்லாம் தரும் சித்தப்பா என்று
கிட்டியிருந் தழுகின்றார் எந்தன் மக்கள்
கையெடுத்த தெய்வமே இந்த வாறு
வெட்டிவிழுத் திடநினைத்த தேனோ ஐயோ
வேதனையாற் துடிக்கின்றேன் வேகி றேனே.

பேரமக்கள்: காண்டீபன், பிரதீபன், தயானந்தி,
தட்சணா, பார்த்திபன்

கண்டபொழு தெல்லாமே தூக்கிக் கொஞ்சி
கையணைத்துத் தூக்கியுங்கள் தோளில் வைத்துக்
கொண்டுவிளை யாடிடுவீர் இவற்றை நெஞ்சம்
கோடியுகம் போனாலும் மறக்கா தையா
தண்டனையே செய்தறியாக் குஞ்சி யையா
தொலைதூர நாட்டினிலே மாண்ட தாலே
கண்டழவும் கிடைக்கவில்லை கலங்கு கின்றோம்
கட்டுமனக் கோட்டையிது தகர்ந்த தையோ.

மருமக்கள்: ரதிசங்கர், அரவிந்தன், அறிவழகன்
அனுதர்சன், நிவேதினி

அள்ளியள்ளிக் குவித்தீர்கள் அன்பு மீறும்
ஆசைமொழிக் கடிதங்கள் எழுதி உள்ளம்
துள்ளிநிற்க வைத்தீர்கள் ஒருநாள் நீங்கள்
தேடிவரு வீர்களென எண்ணி நின்றோம்
அள்ளியது நெஞ்சைஒரு சேதி மாமா
அழுதழுது கண்வீங்கி நிற்கி றோமே
கொள்ளியில்லை குடமில்லை முகத்தைக் கூடக்
காணவில்லை குழறுகிறோம் விதியோ மாமா.

சிறியதகப்பன் சின்னத்தம்பி

மண்ணளைந்து விளையாடி நின்ற நாளும்
மழலைமொழி பேசிநின்று மகிழ்ந்த நாளும்
கண்ணிறைந்த காளையென நின்ற நாளும்
கண்டுமகிழ்ந் தேன்அன்பு காட்டி நின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணடைந்த சேதியது கிடைத்து நெஞ்சு
வேதனையாற் துடிக்குதடா உறங்க மூடும்
கண்ணிலுமுன் வடிவமது தெரிய வெம்பிக்
கலங்குகிறேன் கொடுமையிது தாங்கு வேனோ.

*மாமன் மாமியர் இராமு, சுப்பிரமணியம்*

தேடிவந்த வேளையிலே துடிப்பா யோடித்
தாய்மாமன் மாரென்ற தாலோ ஆசை
யோடெமது விருப்பறிந்து உபச ரித்தாய்
உழைப்பாலே குடும்பத்தை உயர்த்தி விட்டு
ஓடியெங்கே மறைந்தாயோ வாழ்நா ளெல்லாம்
உன்நினைவே உறுத்துமடா கவலை யாலே
வாடியிங்கே வதங்குகிறோம் வடியும் கண்ணீர்
வற்றவழி அறிகிலமே என்செய் வோமே

*சுற்றம் அயலவர்*

தரிசுநிலம் பூஞ்சோலை யான தேபோல்
தம்பியுன்தன் குடும்பத்தை உயர்த்தி வைத்தாய்
வரிசையுடன் அழைத்துமண வாழ்வு காண
வாஞ்சையுடன் இருந்தோமே கண்ணில் நீரே
பெருகிவிடப் பேதலித்துக் கிடக்கி றோம்நாம்
பொலிந்தஉடல் வடிவமது கண்டோ மில்லை
எரியுதடா கும்பியிங்கே எப்பி றப்பில்
இனியவனே உன்முகத்தைக் காணு வோமோ.

*[பொது]*

ஆடித் திரிந்ததோர் பம்பரம் ஆட்டம் முடிந்துவிட
வாடிக் கிடந்ததோ வந்துநாம் பார்க்க வழியுமில்லை
தேடிக் கிடைக்க முடியாத் திரவியம் சென்றதையோ
கூடிக் கதறினும் கொண்டவிச் சோகம் குறைவ தின்றே.

தன்னை வருத்தினன் தன்னவர் வாழத் தகுந்தநிதி
முன்னும் கொடுத்தனன் இன்னும் கொடுப்ப
னெனவிருந்தோம்
இன்ன விதத்தினி லெம்மைவிட் டோட நினைத்ததென்ன
உன்னை நினைத்திட உள்ளம் பொசுங்குதே உத்தமனே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

பொய்யுடலுக் கேநாங்கள் மெய்யென்று பேரிட்டோம்
மெய்பொய்யாய்ப் போனதுக்குத் துக்கமேன் — தெய்வ அடி
தேடிக் கனகரத்னம் சென்றான் துயர்விடுக
கூடுமறம் செய்தாறு வீர்.

— கருணாகரன்

---

## நன்றி

எம்குடும்ப ஒளிவிளக்கு அமரர் சங்கரப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் நோர்வேயில் மரணமான வேளை அங்கே ஆவன செய்துதவிய அன்பர்களுக்கும், சேதியறிந்து வந்து துக்கம் பகிர்ந்தோர், துயராறச் சேதி அனுப்பினோர், அயலிருந்து ஆவன செய்தோர், அந்தியேட்டியிற் கலந்து கொண்டோர் அனைவர்க்கும் எமது இதய நன்றிகள்.

துன்னாலை வடக்கு,
துன்னாலை.
18.1.95.

இவ்வண்ணம்
தாய், சகோதர சகோதரியர்,
மைத்துனன்மார், மைத்துனி

---

தமிழ்ப்பூங்கா அச்சகம் - நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org